சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : OS:51/2016

2022ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ஜான்சன் (PW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

16.09.2022

நான் தற்போது அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் உதவியாளராக பணி செய்கிறேன். நீதிமன்றத்திலிருந்து கோட்டாட்சியருக்கு கோப்பு எண்.ஓ.மூ.ஆ 2/6217/2009 இ நாள். 04.06.2010 – ஐ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த அழைப்பாணை வரப்பெற்றது. மேற்படி அழைப்பாணையில் கண்ட எங்கள் அலுவலக பதிவறையில் தேடி பார்த்ததில் கிடைக்கவில்லை. அது குறித்து நீதிமன்றத்திற்கு கோட்டாட்சியர் கொடுத்த கடிதம் கொண்டு வந்துள்ளேன். அந்த கடிதம் சா.சா.ஆ1 ஆகும். நான் ஆவண பதிவறையில் பணிசெய்யவில்லை. நீதிமன்றத்தில் கேட்கப்பட்ட அலுவலக பதிவறையில் ஆவணம் அழிக்கப்பட்டுவிட்டதாக சொல்லப்படவில்லை. தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் எங்கள் அலுவலத்தில் பராமரிக்கப்பட கூடியதா என்று எனக்கு தெரியாது. அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அல்லது சம்மந்தபட்ட ஆவண காப்பக பொறுப்பு அலுவலரை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும்

என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டபடும் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 6 வது ஆவணமான ஜெராக்ஸ் நகல் தான் நான் கொண்டுவர பணிக்கப்பட்ட ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலா என்றால் கோப்பு எண் சரியாக உள்ளது. அந்த நகலா என்று என்னால் சொல்ல முடியாது.

குறுக்கு விசாரணை இல்லை.